# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

**අංක 11,603 — 1958 නොවැම්බර් 28 වැනි සිකුරාදා — 28.11.1958**

11,603 ம் இலக்கம் — 1958 ம் ஆண்டு கார்த்திகை மாதம் 28 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I: தொகுதி (I)—பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### 1941 ம் ஆண்டின் 27 ம் இலக்கச் சம்பளத் தீர்ப்புச் சங்கச் சட்டம்

#### அறிவித்தல்

1941 ம் ஆண்டின் 27 ம் இல. சம்பளத்தீர்ப்புச் சங்கச்சட்டத்தின் 28 ம் பிரிவின் பிரகாரம், இயந்திரத் தொழிற் சம்பளத்தீர்ப்புச் சங்கத்தால் ஆக்கப்பட்டு, இதனகத்தேயுள்ள அட்டவணையிற் குறிக்கப்பட்ட தீர்மானங்கள் தொழில், வீடமைப்பு, சமூகசேவை மந்திரியால் அங்கீகரிக்கப்பட்டு விட்டனவென்று 1943 ம் ஆண்டின் 40 ம் இல. சட்டத்தால் திருத்தியமைக்கப்பட்ட அச்சட்டத்தின் 27 (3) ம் பிரிவின் பிரகாரம் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

இத்தீர்மானங்கள் 1958 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 1 ந் தேதியன்று நடைமுறைக்கு வரும்.

ஜே. எல். ஈ. பர்ணந்து,
தொழில், வீடமைப்பு, சமூகசேவை
மந்திரிகாரியாலய நிரந்தரக் காரியதரிசிக்காக.

கொழும்பு,
1958 ம் ஆண்டு நவம்பர் மாதம் 21 ந் தேதி.

#### அட்டவணை

இயந்திரத் தொழிற் சம்பளத்தீர்ப்புச் சங்கத்தால் ஆக்கப்பட்டு 1945 ம் ஆண்டு ஓகஸ்ற் மாதம் 10 ந் தேதி வெளிவந்த 9447 ம் இல. கசெற்றில் பிரசுரமான அறிவித்தலினகத்தேயுள்ள அட்டவணையிற் குறிக்கப்பட்டு 1946 ம் ஆண்டு பெப்ருவரி மாதம் 22 ந் தேதி வெளிவந்த 9523 ம் இல. கசெற்றிலும், 1948 ம் ஆண்டு பெப்ருவரி மாதம் 27 ந் தேதி வெளிவந்த 9837 ம் இல. கசெற்றிலும், 1951 ம் ஆண்டு மார்ச் மாதம் 30 ந் தேதி வெளிவந்த 10229 ம் இல. விசேட கசெற்றிலும், 1953 ம் ஆண்டு ஜூன் மாதம் 29 ந் தேதி வெளிவந்த 10542 ம் இல. விசேட கசெற்றிலும், 1955 ம் ஆண்டு ஜூன் மாதம் 30 ந் தேதி வெளிவந்த 10811 ம் இல. விசேட கசெற்றிலும், 1957 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 27 ந் தேதி வெளிவந்த 11224 ம் இல. கசெற்றிலும், 1958 ம் ஆண்டு பெப்ருவரி மாதம் 28 ந் தேதி வெளிவந்த 11268 ம் இல. கசெற்றிலும், 1958 ம் ஆண்டு ஓகஸ்ற் மாதம் 30 ந் தேதி வெளிவந்த 11509 ம் இல. விசேட கசெற்றிலும் பிரசுரமான அறிவித்தல்களிற் குறிக்கப்பட்டவாறு மாற்றப்பட்ட தீர்மானங்கள் அவ்அட்டவணையின் II ம் பாகத்தில் " தொழிலாளிகளின் வகுப்பு " என்ற தலைப்பின் கீழ் மேலும் பின்வருமாறு மாற்றப்படுகின்றன :—

(அ) " அரைத் தேர்ச்சி பெற்ற தொழிலாளிகள் இனம் 1 " என்ற உப-தலைப்பின்கீழ் " பாரந்தூக்கும் இயந்திரம் செலுத்துவோர் " என்ற விடயத்தை விடுத்தும் ;

(ஆ) " தேர்ச்சி பெற்ற தொழிலாளிகள் " என்ற உப-தலைப்பின் கீழ் " கடையாணி இறுக்குவோரும் ஓட்டை சரிப்பண்ணுவோரும் " என்ற விடயத்திற்குப் பதிலாக " கடையாணி இறுக்குவோரும் கலப்பற்றுக் கயிறிடுவோரும் (Caulkers) ; பாரந்தூக்கும் இயந்திரம் செலுத்துவோர் " என்ற விடயங்களை இட்டும்.

### அதியத்தம கவர்ணர் ஜெனரல் அவர்கள் இலங்கையில் பதியப்பெற்ற கப்பற் போக்குவரத்துத் தாபனங்கள் தங்கள் அலுவல்களை நடத்திவரும் முறையை ஆராய்வதற்கும், இலங்கையில் கப்பற்தொழிலை விருத்தி செய்வதற்கு ஆலோசனை கூறுவதற்குமாக நியமித்த கொமிஷன்

மேற்கூறிய கொமிஷன் பின்வரும் அதிகார வரையறுத்தல்களுடன் கவர்ணர் ஜெனரல் அவர்களால் நியமிக்கப்பட்டது :—

(1) இலங்கையிற் பதியப்பெற்ற கப்பற் போக்குவரத்துத் தாபனங்கள் தங்கள் அலுவல்களை நடத்திவரும் முறையை ஆராய்தல். முக்கியமாகக் கீழ்க்கண்ட விஷயங்களை ஆராய்தல் :—

(அ) நிர்வாகம், நிதி, கப்பல்களில் சரக்கு ஏற்றுமதிக்கு வசதி செய்தல், கப்பல்களை எடுத்தல், எதிர்காலத் தேவைகளுக்கு ஏற்பாடு செய்தல், கப்பல்களை விலைக்கு வாங்குதல் ;

(ஆ) பங்குதாரர்களுக்குச் செய்யவேண்டிய கடமைகளைச் செய்தல் ;

(இ) இலங்கை அரசாங்கத்துடன் தாம் செய்வதாக ஒப்புக்கொண்ட விஷயங்களைப் பூர்த்தி செய்தல்.

(2) இலங்கையின் கப்பற் போக்குவரத்துத் தொழில் அபிவிருத்திக்கு வேண்டிய ஆலோசனைகளைக் கூறுதல்—முக்கியமாகக் கீழ்க்கண்ட விஷயங்கள் பற்றி ஆலோசனை கூறுதல் :—

(அ) கப்பற் போக்குவரத்துத் தொழில் நிர்வாகம் : இதில் அன்னிய நாட்டு நிபுணர்களின் சேவைகளைப் பெறுதல், இலங்கையர்களுக்குப் பயிற்சியளித்தல் என்பனவும் அடங்கும்;

(ஆ) நிதி ;

(இ) கப்பல்களைப் பெறுதல் ;

(ஈ) கப்பல்களை வாடகைக்கு அமர்த்தல் ;

(உ) இலங்கைக் கப்பற் போக்குவரத்துத் தொழில் அபிவிருத்திக்கு அரசாங்கமும் வர்த்தகத்துறையும் எவ்விதத்தில் சேவையாற்றலாம் என்ற விஷயம் ;

(ஊ) அரசாங்கக் கப்பற் சரக்குகளை இலங்கைக் கப்பல் போக்குவரத்துத் தொழிலின் அபிவிருத்திக்கு உதவும் வகையில் எவ்விதத்தில் கடல் மூலம் கொண்டு செல்லலாம் என்பதும், அதே நேரத்தில் நியாயமான கட்டணங்களை உறுதிப்படுத்தும் விஷயமும் ;

(எ) இவ்வித அபிவிருத்தி சம்பந்தமான அரசாங்கக் கொள்கையை அமுல் நடத்துதற்கு வேண்டிய அரசாங்க அமைப்பை ஏற்படுத்தல்.

பொது மக்களிடமிருந்து ஆலோசனைகள் கோரப்பட்ட போதிலும், கொமிஷனின் வரையறுத்தல்களின் 2 ம் பாகம் சம்பந்தமாகக் கிடைத்த ஆலோசனைகள் மிகவும் சொற்பமேயாகும். ஆகவே, 1958 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 10 ந் திகதியன்று அல்லது அதற்கு முன், அதிகார வரையறுத்தல்களின் 2 ம் பாகம் சம்பந்தமாக தங்களிடமுள்ள எந்தத் தகவலையும் சமர்ப்பிக்குமாறு, அல்லது ஆலோசனைகளைக் கூறுமாறு இக்கொமிஷன்மீண்டும் பொதுமக்களை வேண்டிக்கொள்கிறது. இந்த ஆலோசனைகள் கீழ்க்காணும் விலாசத்துக்கு எழுத்து மூலம் (எட்டுப் பிரதிகள் விரும்பத்தக்கது) சமர்ப்பிக்கப்படல் வேண்டும். இவை காகிதத்தின் ஒரு புறத்தில் மாத்திரம் தட்டெழுத்தால் அடிக்கப்படுதல் வேண்டும்.

கொமிஷன் விரும்பினால், பின்னர் ஆலோசனை கூறியவர்கள் நேரடியில் சாட்சியம் அளிக்கும் பொருட்டு சமுகமளிக்கும்படி கேட்கப்படலாம்.

கொமிஷனின் கட்டளைப்படி,
ஹி. எச். ஜே. அமரதுங்க,
காரியதரிசி.

இலங்கைக் கப்பற் போக்குவரத்து விசாரணைக்
கொமிஷன் கந்தோர்,
53 ம் இலக்கப் பிரிவு, கால்பேஸ் கோர்ட் 2,
கொழும்பு, 3,
1958 ம் ஆண்டு நவம்பர் மீ 19 ந் உ.

### 4 B ம் மாதிரிப்பத்திரம்

### 1949 ம் ஆண்டின் 3 ம் இலக்க இந்தியர், பாகிஸ்தானிகள் (பிரஜா உரிமை) சட்டம்

### சட்டத்தின் 10 ம் பிரிவின்படி அறிவித்தல்

1949 ம் ஆண்டின் 3 ம் இலக்க இந்தியர், பாகிஸ்தானிகள் (பிரஜா உரிமை) சட்டத்தின் 4 ம் பிரிவின் (1) ம், (2) ம் உட்பிரிவுகளின்படி இதனகத்துள்ள அட்டவணையிற் செய்யப்பட்ட விண்ணப்பம் ஒவ்வொன்றையும் அங்கீகரிக்கும் கட்டளையை, இவ்வறிவித்தல் திகதி தொடக்கம் ஒரு மாத காலத்துக்குள் பொது ஜனங்கள் எவரிடமேனுமிருந்து அத்தகைய கட்டளை பிறப்பித்தற்கு மாறாக யாதேனும் எழுத்துமூலமான தடையும் அத் தடைக்கு ஆதாரமான நியாயங்களையும் உண்மைகளையும்பற்றிய அறிக்கையும் ஒருமித்து எமக்குக் கிடைத்தாலன்றி யான் பிறப்பிப்பேனென்று இந்தியர், பாகிஸ்தானிகளைப் பதிவுசெய்யும் பதிலதிகாரி விக்ரர் யோசேப்பு அரேரல்ட் குணசேகரா ஆகிய யான் அச்சட்டத்தின் 10 ம் பிரிவின்படி இத்தால் அறிவித்தல் கொடுக்கிறேன்.

தடைகூறும் அறிக்கை ஒவ்வொன்றிலும் தடைகூறுபவரின் முழுப்பெயரும் விலாசமும் இடப்பட வேண்டும்.

கொழும்பு,
1958 ம் ஆல் கார்த்திகைமீ 24 ந் உ.

வி. யோ. அ. குணசேகரா,
இந்தியர் பாகிஸ்தானிகளைப் பதிவுசெய்யும் பதிலதிகாரி.

அட்டவணை

| விண்ணப்ப இலக்கமும் திகதியும் | | இலங்கைப் பிரஜையாகப் பதிவுசெய்யும்படி விண்ணப்பஞ்செய்பவரின் பெயரும் விலாசமும் | விண்ணப்பஞ்செய்பவர் இலங்கைப் பிரஜையாகத் தம்மைப் பதிவுசெய்யும் பொழுதே, இலங்கைப் பிரஜையாகப் பதிவுசெய்ய விண்ணப்பஞ்செய்பவர் கோரும் ஒவ்வொருவரின் பெயரும் இன முறையும் |
|---|---|---|---|
| J 824—28.2.51 | .. | நாராயணன் முனிசாமி, செயின்ற் அன்றூஸ் பிரிவு, லக்சபானைக் கூட்டம், மஸ்கேலியா | பச்சையம்மா (மனைவி), கோபாலக்கிருஷ்ணன் (மகன்), கோவிந்தராஜ் (மகன்), பார்வதி அல்லது குப்பம்மா (மகள்), கிருஷ்ணன் (மகன்), நாராயணன் அல்லது நாராயணசாமி (மகன்), முத்துலெட்சுமி (மகள்), பாலக் கிருஷ்ணன் (மகன்) |
| J 1451—21.6.51 | .. | செபத்தியான் சவரி, மொக்காத் தோட்டம், மஸ்கேலியா | சவரியம்மா (மனைவி), செபமாலை (மகன்), அந்தோனியம்மா அல்லது அந்தோனி மேரி (மகள்), யேசுபாலன் (மகன்), மேரி பிலோமினு (மகள்) |
| J 2672—25.3.51 | .. | சின்னக்கறுப்பன் கந்தசாமி, பிறவுன்லோத் தோட்டம், மஸ்கேலியா | முருகாயி (மனைவி), பிச்சை (மகன்), சுப்பிரமணியம் (மகன்) |
| J 2837—17.1.51 | .. | கோவிந்தன் வேலாயுதம், மொக்காத் தோட்டம், மஸ்க் கேலியா | கன்னியம்மாள் (மனைவி), பரமசிவன் (மகன்), அமராபதி அல்லது அஞ்சாத்தா (மகள்), வனத்தாயி (மகள்), துலுக்கானு (மகள்) |
| J 3641—8.7.51 | .. | வேலாயுதன் பெரியசாமி ஸ்ரொக்கோம் தோட்டம், அப்கொட் | கறுப்பாயி (மனைவி); சுப்பையா (மகன்), காமாட்சி (மகள்), முத்துச்சாமி (மகன்), பெரியண்ணன் (மகன்), தையநாயகி (மகள்) |
| J 3764—13.7.51 | .. | ஜெயமணி ஞானமுத்து தோமஸ், லக்சபானைத் தோட்டம், மஸ்கேலியா | ஜெயபாய் பாக்கியம் (மனைவி), அரி செல்வமணி (மகன்), இங்சிலி வில்பிறெட் ஞானராஜ் (மகன்), லெஸ்லி சர்க்குணம் (மகன்), தானியல் சந்திரன் ஸ்ரான்லி (மகன்), பிறடறிக் சாமுவேல் (மகன்) |
| J 5709—29.7.51 | .. | கன்னி கரும்பாயிரம், பெயர்லோன் தோட்டம், அப்கொட் | இலெட்சுமி (மனைவி), பச்சைமுத்து (மகன்), வீரையா (மகன்), மூக்காயி (மகள்), செல்லம்மா (மகள்) |
| J 6100—22.7.51 | .. | திருமேனி பழனியாண்டி, மகானிலுப் பிரிவு, ஸ்றத்பேக் கூட்டம், அப்கொட் | பார்வதி (மனைவி), வள்ளியம்மா (மகள்), பழனியம்மா (மகள்) |
| J 6206 22.7.51 | .. | பக்கிரிசாமி வீரபுத்திரன், மகானிலுப் பிரிவு, ஸ்றத்பேக் கூட்டம், அப்கொட் | சிவபாக்கியம் (மனைவி), சீரங்காயி (மகள்), சுப்பிரமணியம் (மகன்) |
| J 6413—8.7.51 | .. | மதலமுத்து இன்னாசி, மொறேப் பிரிவு, மொறேக் கூட்டம், மஸ்கேலியா | பாக்கியம் (மனைவி) |
| J 6582—28.7.51 | .. | மரியாபிள்ளை ஏகாம்பரம்பிள்ளை, வட்டவெல்லைத் தோட்டம், வட்டவளை | பச்சையம்மாள் (மனைவி), கணேசன் (மகன்), தனலெட்சுமி (மகள்) |
| J 8108—25.7.51 | .. | ஆரோக்கியம் சந்தியாகு, செயின்ற் யோன் டெல் றேத் தோட்டம், நோர்வூட் | சந்தணம் (மனைவி), அந்தோனி (மகன்), சின்னப்பன் (மகன்), சந்தணம் (மகன்), செபமாலை மேரி (மகள்), மதலையம்மாள் (மகள்), அந்தோனிமுத்து அல்லது மைக்கேல் (மகன்), பிலோமினுள் (மகள்) |
| J 9547—30.7.51 | .. | குமாரசாமி பெருமாள், குயின்ஸ்லண்ட் தோட்டம், மஸ்க் கேலியா | சின்னம்மாள் (மனைவி), ராசையா அல்லது துரைராசு (மகன்), இரெங்கராசு அல்லது தாசன் (மகன்) |
| J 11196—2.8.51 | .. | ஆறுமுகம் வீரப்பன் போட்றீத் தோட்டம், நோர்வூட் .. | பஞ்சவர்ணம் (மனைவி) |
| J 11283—22.7.51 | .. | காளிமுத்து கோவிந்தசாமி, கெடசுப் பிரிவு, மொறேக் கூட்டம், மஸ்கேலியா | அகிலாண்டம்.(மனைவி), சரோசா (மகள்) |
| J 11366—22.7.51 | .. | மாரிமுத்து வீரமுத்து, கோர்புப் பிரிவு, மொறேக் கூட்டம், மஸ்கேலியா | பெரியம்மா (மகள்), அண்ணாமலை (மகன்), தாண்டாயி (மகள்), இராசாம்பாள் அல்லது வள்ளியம்மா (மகள்), பசுமாதேவி (மகள்) |
| K 948—21.10.50 | .. | பெருமாள் சிவானு, மேற் பிரிவு, கொட்டியாக்கலைத் தோட்டம், போகவந்தலாவை | தனலெட்சுமி (மனைவி) |
| K 2826—22.11.50 | .. | முனியாண்டி முத்துராக்கு, கில்லாணித் தோட்டம், போகவந் தலாவை | அங்கம்மா (மனைவி), கிருஷ்ணன் (மகன்), கறுப்பையா அல்லது பொன்னையா (மகன்) |
| K 3075—3.3.51 | .. | முத்துலிங்கம் இராமசாமி, கொட்டக்கலைக்கெலித் தோட்டம், அற்றன் | இலெட்சுமி (மனைவி), வடிவேலு (மகன்) |
| K 5299—6.5.51 | .. | கெங்கன் முருகன், காசிள்றீத் தோட்டம், டிக்கோயா .. | கெங்கம்மாள் (மனைவி), வேலு (மகன்), பொன்னம்மாள் அல்லது பொன்னம்மா (மகள்), முருகாயி அல்லது முருகம்மாள் (மகள்), சிவானு (மகன்), காமாட்சி (மகள்) |

| விண்ணப்ப இலக்கமும் திகதியும் | இலங்கைப் பிரஜையாகப் பதிவுசெய்யும்படி விண்ணப்பஞ்செய்பவரின் பெயரும் விலாசமும் | விண்ணப்பஞ்செய்பவர் இலங்கைப் பிரஜையாகத் தம்மைப் பதிவுசெய்யும் பொழுதே, இலங்கைப் பிரஜையாகப் பதிவுசெய்ய விண்ணப்பஞ்செய்பவர் கோரும் ஒவ்வொருவரின் பெயரும் இன முறையும் |
|---|---|---|
| K 5364—22.7.51 .. | ஆவூரு மம்மு, 70, பண்டாரநாயக்கா நகர், அற்றன் .. | கதீசா பீபீ (மனைவி), பீ பாத்துமா பீபீ (மகள்), சித்தி பலீலா (மகள்), அப்துல் காதர் (மகன்), சித்தீக் (மகன்), மைமூன் (மகள்) |
| K 7954—2.7.51 .. | இராமசாமி நடேசன், ஒஸ்போண் தோட்டம், அற்றன் .. | செல்லம்மா (மனைவி), இராசமாணிக்கம் (மகன்), ஜெய குமார் (மகன்) |
| K 8713—22.7.51 .. | இரத்தினம் பிருன்சிஸ், பிறைட்லண்ட் தோட்டம், போகவந் தலாவை | அந்தோனியம்மாள் (மனைவி), யேசையா (மகன்) |
| K 11228—1.8.51 .. | இராமசாமி அல்லது இரெங்கசாமி பெருமாள், த கொழும்பு கொமேசல் கம்பனி லிமிரெட், அற்றன் | இராசம்மாள் (மனைவி) |
| K 11260—4.8.51 .. | சென்னப்பன் கோவிந்தராசு, மேற் பிரிவு, வனராசக் கூட்டம் டிக்கோயா | ஜெயலெட்சுமி (மனைவி), கிருஷ்ணசாமி (மகன்), ஜெகதீசன் (மகன்), தவமணி (மகள்) |
| J 4258—18.7.51 .. | பிறின்ஸ் நல்லதம்பி மணி, ரில்லிக்கூல்றித் தோட்டம், லிந்துலை | அலிஸ் கமலம் பத்மாவதி (மனைவி), யனற் ஞானபாக்கியம் எலன் (மகள்) |
| J 9866—5.8.51 .. | சின்னப்பன் வீரன், கஸ்க்கிபென் தோட்டம், மஸ்க்கேலியா | நல்லம்மா அல்லது பெரியம்மா (மகள்), சிவானு (மகன்), ஆறுமுகம் (மகன்), வேலு (மகன்), பெருமாயி (மகள்), சுந்தரம் அல்லது பார்வதி (மகள்) |
| K 11168—15.7.51 .. | பெத்தன் பொன்னுச்சாமி, பிளிங்பொன்னித் தோட்டம், டிக்கோயா | பெத்தாயி (மனைவி), மருதை அல்லது சங்கப்பிள்ளை (மகன்), இராமசாமி (மகன்), பெரியக்காள் (மகள்), இராசு அல்லது வீரன் (மகன்), சின்னையா அல்லது பொன்னுச்சாமி (மகன்), அலமேலு அல்லது செல்லம்மா (மகள்), பெரியசாமி அல்லது ஐயாவு (மகன்), பாப் பாத்தி அல்லது அங்கம்மா (மகள்) |
| K 11837—4.8.51 .. | பெரியண்ணன் தங்கவேல், எரேல் தோட்டம், அற்றன் .. | பொன்னம்மாள் (மனைவி), பெரியசாமி (மகன்), சாமிக் கண்ணு அல்லது சாமிவேலு (மகன்), நாகரத்தினம் (மகன்), பச்சையம்மா (மகள்), கோவிந்தசாமி அல்லது சின்னச்சாமி (மகன்), பெரியண்ணன் (மகன்), மனோ கரன் (மகன்), பூபதி (மகள்) |
| F 6478/K—27.7.51 .. | எலியேசர் பாக்கியநாதன் அல்பேட் யாக்கோப்பு, காம்பியன் கூட்டம், போகவந்தலாவை | புளோரு நவமணி (மனைவி), சாமுவேல் (மகன்), தானியல் (மகன்), யூலியற் (மகள்) |
| V 7413/W/V/F/L/K 31·7·51 .. | ஆறுமுகம் பழனியாண்டி, 62, பெருந் தெரு, அற்றன் .. | சிவபாக்கியம் (மனைவி), இராசமாணிக்கம் அல்லது இராம நாதன் (மகன்), ஏகாம்பரம் (மகன்) |
| P 3161—25.10.50 .. | மதலமுத்து யோசேப்பு அல்லது அந்தோனிமுத்து, பசிபேண் கிழக்குப் பிரிவு, அக்கிறக்கந்தைக்கூட்டம், லிந்துலை | மதலைமேரி (மனைவி), லூசியா மேரி பத்திமா (மகள்), திரவியம் பாக்கியம் (மகள்) |
| P 5192—30.10.50 .. | பெருமாள் கவுண்டர் தாசையா, 20, அக்கிறஹவாக் கடை வீதி, அக்கிறப்பத்தனை | நாகம்மாள் (மனைவி), பெருமாள் (மகன்), மனோன்மணி அல்லது செல்லம்மாள் (மகள்), விசயரத்தினம் (மகன்) |
| P 6302—20.2.51 .. | முத்துச்சாமி பெருமாள், பல்மோறல் தோட்டம், அக்கிறப் பத்தனை | செல்லம்மாள் (மனைவி), இராயேசுபரி (மகள்), நனலெட்சுமி (மகள்), முருகன் (மகன்) |

# நானாவித அறிவித்தல்கள்

## 1959 ம் ஆண்டு துப்பாக்கி லைசென்சுகள் புதுப்பித்தல்
## மன்னார் மாவட்டம்

துப்பாக்கிச் சொந்தக்காரர்கள் 1959 ம் ஆண்டுக்குரிய தங்கள் லைசென்சுகளை தாங்கள் வசிக்கும் பகுதிக் காரியாதிகாரிகள் கந்தோர்களில் 1958 ம் ஆண்டு மார்கழி மாதம் முதலாம் திகதி தொடக்கம் 1958 ம் ஆண்டு மார்கழி மாதம் 31 ந் திகதிக்கும் இடையில் புதுப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.

புதுப்பிக்கும் பொழுது 1958 ம் ஆண்டுக்குரிய லைசென்சுகளையும் லைசென்சுக் கட்டணத்தையும் கொண்டு வரவேண்டும், அல்லது அனுப்ப வேண்டும். 1958 ம் ஆண்டு உள்ள லைசென்சு கைவசமில்லாவிட்டால் லைசென்சு தவறிவிட்டதென்று அத்தாட்சிப் பத்திரம் பெறுவதற்குரிய கட்டணம் ரூபா 1 (ஒன்று) அனுப்பவேண்டும், அல்லது கொண்டு வர வேண்டும். 1958 ம் ஆண்டு மார்கழி மாதம் 31 ம் திகதிக்கு முன்புதங்கள் லைசென்சுகளை புதுப்பிக்கத் தவறியவர்கள் லைசென்சுக் கட்டணத்துக்குரிய தொகையான ரூபா 1 (ஒன்றை) தெண்டமாக செலுத்தவேண்டியிருக்கும். இத் தெண்டத்தைப் பெற்றுக்கொண்டு பகுதிக் காரியாதிகாரிகள் லைசென்சுகளை 1959 ம் ஆண்டு பங்குனி மாதம் 31 ந் திகதி வரையில் புதுப்பித்துத் தரலாம். இத் திகதிக்குப் பிற்பாடு கச்சேரியிலேயே லைசென்சுகள் புதுப்பிக்கப்படும். 1959 ம் ஆண்டு பங்குனி மாதம் 31 ந் திகதிக்குமுன் லைசென்சுகள் புதுப்பிக்காதவர்கள்மீது எதிராகக் கோட்டில் வழக்குத் தொடரப்படும். லைசென்சுக் கட்டணத்திற்காக முத்திரைகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

எக்காரணத்தைக் கொண்டாவது துப்பாக்கி பாவிக்க முடியாத நிலைமையில் துப்பாக்கிகள் இருந்தால் அந்த துப்பாக்கியை கச்சேரியிலாவது, அல்லது துப்பாக்கி வைத்திருப்போர் வசிக்கும் பகுதிக் காரியாதிகாரிகள் கந்தோரிலாவது 1958 ம் ஆண்டுக்குரிய லைசென்சுடன் ஒப்படைத்தல் வேண்டும். அப்படிச் செய்யத் தவறியவர்கள் வழக்கமாகச் செலுத்த வேண்டிய கட்டணத் தொகையைச் செலுத்தி 1959 ம் ஆண்டுக்கு உரிய லைசென்சைப் பெறவேண்டும்.

லைசென்சுகள் புதுப்பிக்கும் பொழுது தங்கள் துப்பாக்கிகளையும் கொண்டுவரல் வேண்டும் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

கீ. லுடெக்கின்ஸ்,
அரசாங்க அதிபர், மன்னார்.

மன்னார் கச்சேரி,
1958 ம் ஆண்டு நொவம்பர் மீ 24 ந உ.

இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது.